# சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியற் புலத்தில் அறிவின் தன்மையும் வெளிப்பாடும்

கி. கந்தவேள்[1]


## ஆய்வுச் சுருக்கம்

*இந்திய மெய்யியற் புலத்தில் தனக்கென தனியிடத்தைக் கொண்டதாக அமைவது சைவசித்தாந்தம் எனலாம். இது முப்பொருளை ஏற்று நின்று பன்மைவாதமாகத் திகழ்கின்றது. இந்நிலையில் சைவசித்தாந்தப் பௌதிக அதீத உண்மைகளாக பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் கொள்ளப்படும் நிலையில் இக்கருத்துக்களை நிறுவ பிரமாணங்கள் உதவுகின்றது. சைவசித்தாந்த அறிவாராய்ச்சியில் பற்றிய கருத்தாடலில் அறிவின் தன்மையும் வெளிப்பாடும் முக்கியமாக அமைகின்றது. அறிவானது உண்மையினை உணர்த்துகின்ற நிலையில் அது சுய வெளிப்பாடுடையது என்பதை உணர்த்துவதாகவே அமைகின்றது. ஏனைய மெய்யியல்களைப் போல சைவசித்தாந்தம் வலிதான அறிவு, வலிதற்ற அறிவு என அறிவை வகைப்படுத்தாமல் அறிவின் சுயமான வலிதாம் தன்மையை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளமையை ஆய்வு செய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது. சைவசித்தாந்தப்படி அறிவு சுயவலிமை உடையது எனவும் ஆன்மா தனது சுயப்பிரகாசமான அறிவைப் பெறுகின்றது. அதற்கு புறக்காரணியாக மல பந்தத்தினால் மட்டுமே அறிவைப் பெறமுடியாதிருக்கின்றது. இந்நிலையில் ஆன்ம சிற்சகத்தி என்பது சுயமாக இயங்கவல்லது என சைவசித்தாந்தம் குறிப்பிடும் நிலையில் ஆன்மாக்கு அறிவு சுயப்பிரகாசமானது என்றும் கருத்து நிலையினை எடுத்தியம்பி அனைத்தையும் அறியும் ஆற்றலை ஆன்மாவுக்குக் கொடுப்பது அறிவு என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.*


**திறவுச் சொற்கள்:**அறிவு, ஆன்ம சிற்சக்தி. சுயப்பிரகாசம், சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல்

[1]*இலங்கை திறந்த பல்லைக்கழகம், யாழ்ப்பாணம்.*

**அறிமுகம்**

மனித நாகரிக மற்றும் விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் ஓர் முக்கிய அம்சமாக அமைவது அறிவு பற்றிய விசாரங்களாகும். இந்த வகையில் அறிவு எவ்வாறு தோற்றுகின்றது. அறிவின் தன்மை மற்றும் அதன் வடிவம், அறிவின் தொழிற்பாடு பற்றிய விடயங்களை உள்ளடக்கிய எல்லா சந்தேகங்களுக்கும் விடைகாண முற்படுவது அறிவு பற்றிய விசாரமாக அமைகின்றது. அறிவு பற்றிய உண்மையை அறிவதனால் எல்லாப் பொருள்களையும் அறிதற்கு ஆன்ம அறிவு தான் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வறிவிற்கு, அறிவளவைதான் அடிப்படையாகின்றது. இத்தகைய அறிவளவையைத்தான் சைவசித்தாந்தமும் அறிவாராய்ச்சியாக வரையறுக்கின்றது. (இரா, 1966:5-7)

மனிதன் எப்போது சிந்திக்கத் தொடங்கினானோ அன்று தொட்டு அறிவு பற்றிய விசாரமும் அறிவு பற்றிய ஆராய்ச்சிகளும் தோற்றம் பெற்றன. மெய்யியற் பரப்பில் அறிவு பற்றிய விசாரம் முக்கியமாகின்றது. மேலைத்தேய மெய்யியல் என்பது 'ஞானத்தை தேடுதல்' என்ற பொருளில் அறிவு பற்றிய விடயங்களை ஆராய்கின்ற அதேநேரம் இந்திய மெய்யியலானது நிலைபேறடைதலை (Immortality) பற்றிச் சிந்தித்தல் எனப் பொருள் கொள்கின்றது. இதனால் இந்திய மெய்யிலை தர்சனம் (Darshana) என்ற பெயரால் அழைக்கின்றனர். இந்திய சிந்தனைமரபு தர்சனம் என்ற பெயரால் ஆன்மா குறித்தும் அடைவுகள் குறித்தும் ஆராயமுற்பட்டுள்ளது. (கிருஷ்ணராஜா 1995:7-11) பொதுவாக அறிவு பற்றிய நிலைப்பாட்டில் அறிவை அறிதல் அறிந்ததை உணர்தல் எனும் இரு வகைப்பட்ட அடைவுகளினூடு ஆன்மா பற்றிய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயமுற்பட்டுள்ளது. தர்சனம் என்பது நேரடி அனுபவம், நேரடியாகக் காணல் என்ற அர்த்தப் பொருளில் உண்மை அல்லது உள்பொருள் குறித்த ஆய்வாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் இந்திய மெய்யியல் தரிசனம் பற்றிய கருத்தியலில் அறிதல் (knowing), உணர்தல் (Feeling) இணைந்தவாறாகச் செயற்படுகின்றன.

அறிவு வாழ்வின் இலக்கினையும் தத்துவத்தின் செழுமையினையும் எடுத்தியம்புவதாகவுள்ளது. ஏனெனில் இந்திய மெய்யியலானது வாழ்க்கை நெறிச் சிந்தனை என்னும் வகையில் வளர்ந்து வந்துள்ளது. இந்திய மெய்யியல் கோட்பாட்டின்படி அறிவானது உண்மையை உணர்த்துகின்றது. அறிவு சுயவெளிப்பாடுடையது. ஆதலால் அறிவானது உண்மையை உணர்த்தவில்லை எனக் கூறமுடியாது. அறிவு பற்றிய கருத்தியலைப் பயன்படுத்துகின்றபோது பல வினாக்கள் எம்மிடம் எழுகின்றன. ஒருவர் ஒரு விடயத்தை அறிகின்றபோது எவ்வாறு அறிகின்றான்? அவ்வறிவை முழுமையான அறிவாக எடுத்தாழலாமா? போன்ற பல வினாக்களுக்கு உரியதாய் பரந்து விளங்குகின்ற நிலையில் அறிவு

முழுமையான, நிச்சயமான அறிவைப் பெறுதல் சாத்தியமாகின்றது. இந்நிலையில்தான் அறிவுத் தொகுதியில் அறியொணாத அறிவு என ஒன்றிருத்தல் முடியாது.

அறிவானது விழைவு, செயல் என்னும் கூறுகளுடன் இணைந்துள்ளது. (ஞானக்குமாரன், 2017:16) இந்நிலையில் தான் உள்ளத்தின் தொழிற்பாடுகளுள் ஒன்றாகிய அறிவு நிலையை அறிவளவையியல் மூலம் அறிய முற்படுகின்றது. வெளிப்பாடென்பது சாராம்சத்தில் அறிவின் உண்மைத் தன்மையை உறுதி செய்கின்றது. இதனை நாம் ஏற்போமாயின் அறிவு தன்னியல்பில் கட்டாயமான வலிதாம் தன்மையையும் அது எச்சந்தர்ப்பத்திலும் வலிதற்றதாய் மாறுவதில்லை என்பதை நாம் உணர வேண்டும். அதேவேளை அறிவின் சுயமான வெளிப்பாட்டைத் தடுக்கும் காரணிகள் இருப்பினும் அறிவென்பது சைவசித்தாந்த நிலைப்பாட்டின்படி சுயமான வெளிப்பாட்டினை உடையதெனலாம்.

அறிவென்பது சுயவெளிப்பாட்டினை உடையதாக இருக்கும் நிலையில் அறிவு வெற்றிடத்தில் தொழிற்படாது யாதாயினும் ஒன்றைப் பற்றியதாகவே அமைந்திருக்கும். (ஞானக்குமாரன், 2017:18-19) இந்நிலையில் அறிவு பற்றிய ஆய்வில் அறிவானைப் பற்றியோ, அறியப்படும் பொருள் பற்றியோ கருதுவது இல்லை. அறிவு அல்லது ஞானம் குறித்தே சைவசித்தாந்த அறிவியல் கருத்துக் கொள்கின்றது. இந்நிலையில் அறிவின் அடிப்படை விடயங்களாக அறிவான், அறியப்படும் பொருள், அறிவு ஆகிய மூன்று கூறுகள் எல்லா அறிவு நிலைகளிலும் தொழிற்படும் எனலாம்.

எனவே அறிவின் பொருத்தக் கொள்கையை ஏற்றுக் கொள்வதும் இசைவுக் கொள்கையையோ அல்லது பயன்வழிக் கொள்கையையோ பயன்படுத்தி அறிவின் உண்மைத் தன்மையை அறியலாம் எனக் கூறுவது அல்லது வாதிடுவது பொருத்தமற்றது. நியாயக் கொள்கையினர் அறிவை இரண்டாக வகைப்படுத்துவர். இவர்களது அபிப்பிராயப்படி அறிவு

1. வலிதான அறிவு
2. வலிதற்ற அறிவு

என்ற வகையீட்டில் அமைகின்றது. ஆனால் சைவசித்தாந்திகள் அறிவின் சுயவலிதாம் தன்மையினை ஏற்றுக் கொண்டுள்ளமையால் அவர்கள் வலிதற்ற அறிவு பற்றி எந்த நிலையிலும் சிந்திக்கவில்லை. வேதாந்திகளும் நியாயக் கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள நிலையில் மீமாம்சகர்களும் அறிவின் வலிதற்ற தன்மை பற்றி ஏற்காமல் அறிவின் சுயவலிதாம் தன்மையை ஏற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்திய மெய்யியலில் அறிவின் சுயவலிதாம் தன்மை பற்றிப் பேசுகின்றபோது அறிவின் தோற்றம், இயல்பு, எல்லைகள் போன்றவற்றை ஆராய்கின்ற நிலையில் ‘அறிவு அளவை

இயல்' பற்றிய கருத்து முக்கியமாகின்றது. (இராமானுஜாச்சாரி, 1966:11) இந்திய மெய்யியலில் உள்ள தரிசனங்கள் யாவும் அளவையியல் பற்றிய ஆய்வு அல்லது பிரமாணவியல் பற்றி ஆராய்கின்றன. இதற்குக் காரணம் அறிவு மற்றும் அளவையியல் என்பன ஒன்றுக்கொன்று சார்ந்தனவாக இருப்பதனாலாகும். இந்நிலையில் இந்திய மெய்யியலில் உள்ள தரிசனங்கள் யாவும் உள்பொருள் குறித்து தமது கொள்கையை வரையறை செய்வதற்கு அறிவான் குறித்தும் அறியப்படுபொருள் குறித்தும் நாம் கொள்ளும் கொள்கைகளுக்கு ஏற்பவே அறிவளவைக் கொள்கை அமைந்துள்ளது. இத்தகைய அறிவுக் கொள்கையைச் சைவசித்தாந்தமும் ஏற்று காட்சி, அனுமானம், ஆப்தம் எனும் மூவகைப் பிரமாணங்களின்வழி விளக்க முற்படுகின்றன.

அறிவைப் பெறுகின்ற மூலகங்கள் பற்றிய சிந்தனைகளும் அறிவாராய்ச்சியியலில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சைவசித்தாந்தம் சுட்டுகின்ற பிரமாணங்களின் மூலம் அறிவானது பெறப்படுகின்றது. பொருள் பற்றிய அறிவானது புலக்காட்சியினால் பெறப்படும் என புலனறிவாதிகளால் மேற்கத்தேய மெய்யியலாளர் சுட்டுகின்ற நிலையில் சைவசித்தாந்தம் அறிவு பற்றி கருத்தியலில் உண்மைத்தவம் பற்றிய அறிவாகவே சுட்டி நிற்கக் காணலாம். இக்கருத்தியல் சார்ந்த நிலையில் 'அறிதல்', 'உணர்தல்' என்ற இருவேறு சொற்களின் கருத்தாடல் முக்கியமாகின்றது. (சிவானந்தமூர்த்தி, 2014:104) இங்கு அறிதல் என்பது சைவசித்தாந்தத்தில் அளவையியலால் அளந்தறியத்தக்கது என்ற பொருளிலும் உணர்தல் என்பது ஆன்ம உள்ளடகத்திற்கு உரியதாகவும் சுட்டப்படுகின்றது. இங்கு அறிதல் முறையைக் காட்டிலும் உணர்தல் முறையே மெய்ஞானத்தை தரிசிக்க உகந்த முறையாகச் சைவசித்தாந்திகள் ஏற்றுக்கொள்கின்றனர் எனலாம். இதனை சிவஞானமுனிவர் சிவஞானமாபாடியத்தில் 'உயிரின் அறிவாற் பற்றப்படாத அருவ இயல்பினான அறிவு அதாவது அறின்சொருபநிலை அறிதல் நிலையைவிட உணர்தல் நிலையிலேயே பெறுவதற்கு இலகுவானது' (சிவானந்தமூர்த்தி 1936:13) எனக் குறிப்பிடப்படுகின்றார்.

ஆனால் அறிவதற்காக மூன்று அளவைகளை சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆன்மாக்கு அவை வழி அளவைகளாக நின்று உதவுகின்றது. சைவசித்தாந்திகளின் அறிவாராய்ச்சியியல் கடந்த நிலைக்குரியதாதலால் இவர்களின் அபிப்பிராயப்படி உயிரும் அறிவும் சாராம்சத்தில் ஒன்றுக்கொன்று அந்நியமானதல்ல. அறிவு உள்ளடக்கத்தில் ஆன்மாக்குரிய அது புத்தி தத்துவத்தின் துணைக்கொண்ட அது புரிந்து கொள்ளப்படுகின்றது.

ஆன்ம சிற்சக்திப் பிரமாணமே சைவசித்தாந்தம் சுட்டுகின்ற பிரதானமான அளவையாகின்றது. (சிவானந்தமூர்த்தி, 2014:104) இந்நிலையில் அறிவை நிகழ்தகவு

அடிப்படையில் சுட்டிக் காட்டலாமே தவிர அதற்கு மேலாக உணர்வித்தல் முடியாது. காரணம் சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் என்பது கடந்த நிலைக்குரியது என்பதால் ஆன்ம சிற்சக்தி பிரமாணமே சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியற் கோட்பாட்டின்படி சுயமாக இயங்கவல்லது. இதனால் அறிவு சயம்பிரமகாசமானது என அழைக்கப்படுகின்றதுடன் ஆன்மா புறக்காரணியான மலபந்தத்தால் உயிர் தனது சுயப்பிரகாசமான அறிவைப் பெறமுடியாதிருக்கின்றது. அதேநேரம் சிற்சக்திக்கு எது உண்மையாகப் புலப்படுகின்றதோ அது அறிகையின் உள்ளடக்கத்திலும் உண்மையாக இருக்குமென்பது பெறப்படும். இதன்படி அறிவின் வலிதாம் தன்மை என்பது சைவசித்தாந்த நிலைப்பாட்டின்படி அறிவிற்குரிய கட்டாயமானதும் போதுமானதுமான நிபந்தனையாக அமைகின்றது.

சைவசித்தாந்தம் ஆன்மா சுயமாகவே அறியுமாற்றல் கொண்டதென ஏற்றுக்கொள்கின்றது. இதன் கருத்தியல் யாதெனில் ஆன்மாவால் அறியப்பட்டது எதுவோ அது எப்போதும் உண்மையாக இருக்கும் என்பதாகும். ஒரு விடயத்தை அறிந்ததன் பின் அது தவறாக இருக்கக்கூடும் என நிறுவமுடியாது. அப்படி வாதிட்டால் அது புலனனுபவங்களுக்குரியது. மேலும் சிப்பியைத் தவறாக வெள்ளி என முடிவு செய்யலாம். ஆனால் கடந்த நிலை என்பது அறிவாராய்ச்சியியலில் குறிப்பிட்டால் இது வகையீட்டுப் போலியாக அமையும். (ஞானக்குமாரன், 2017:25–27) ஏனெனில் சைவசித்தாந்த அறிவாராய்ச்சி யியலின்படி அறியப்படுவது எப்போதும் உண்மையானதாகவும் வலிதானதாகவும் இருக்கும். சிந்தனையுள் பொதுவுண்மைகளைக் கொண்டு சிறப்புண்மைகளை அல்லது தனியுண்மைகளை அறிதல் ஒரு நிலையாகும். தனியுண்மைகள் பலவற்றை முறையாக ஆராய்ந்து அவை உணர்த்தும் பொதுவுண்மைகளை உணர்தல் மற்றொரு நிலையாகும். இதற்கு பகுப்புவழி மற்றும் தொகுப்புவழி அளவை மேற்கொள்கின்றது. இந்நிலையில் தான் நாம் பெறும் அறிவு எவ்வாறு தோன்றுகின்றது? இவ்வறிவின் இயல்பு யாது? அறிவின் தோற்றநிலை யாவை? போன்றவற்றுக்கு விடை காண்பதாகவே அமைவது அறிவு அளவை இயலாகும்.

இந்த வகையில் எவற்றை நாம் அறியலாம், என்ற நிலையில் புரிந்து கொள்ளப்பட்டதையே அறியலாம். புரிந்து கொள்ளல் என்றால் என்ன என ஆராயுமிடத்து அறியப்பட வேண்டிய பொருள் எதுவோ அது பற்றிய உண்மையான தீர்வென்பது அப்பொருள் பற்றிய புரிந்து கொள்ளலுடன் கூடியதாகும். இங்கு புரிந்து கொள்ளல் இல்லாதபோது உண்மையான தீர்ப்பு என்பது சாத்தியமாவதில்லை என்பதனால் சைவசித்தாந்த நிலைப்படி அறிவு என்பது வலிதான தன்மையுடையதாகக் காணப்படுகின்றது.

அறிதல் புரிந்து கொள்ளலுடன் கூடியது என்பதைப் பின்வருமாறு விளக்கலாம். 'நான் இங்கு ஒரு பானையைக் காண்கிறேன்' என்னும் கூற்றில் இரு விடயங்கள் உள்ளடக்கியிருக்

கின்றன. ஒன்று பானையைக் காணுதல் மற்றையது கண்டதைப் பானையென புரிந்து கொள்ளல் ஆகும். காண்பது ஒரு விருத்தியாவது போல புரிந்து கொள்வதும் ஒரு விருத்தியாகுமோ என்பது பிரச்சினைக்குரியது என வாதிடினும் இந்திய மெய்யியலில் உள்ள நியாயவாதிகள் போன்றோர் இதை விருத்தி ஞானமே என வரையறுப்பதில் சைவசித்தாந்தமும் ஒன்று பட்டு நிற்கின்றது. எடுத்துக்காட்டாக ஒரு பானையைக் காணுதல் என்ற வாக்கியத்தில் முதலில் எழுவது ஒரு பொருளிற்கும் புலன்களிற்கும் இடையிலான தொடர்பாகும். பின்னர் மனம் செயற்படத் தொடங்கி உள்ளுணர்வு ஞானத்தால் அது பானையே என்ற அறிவைத் தருகின்றது. இந்நிலையில் சைவசித்தாந்தம் புலன் வழிப் பெறப்பட்ட அறிவை காட்சி, அனுமான அளவைகள் வழி செயற்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

சைவசித்தாந்திகள் காட்சி, ஞானம் புலன்வழிப் பெற்படுவது என்றும் இது முதல்நிலை ஞானம் என்றும் வரையறுத்தனர். புலன்வழிப் பெறப்பட்ட தரவுகள் மனதின் தொழிற்பாட்டால் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் மனதின் தொழிற்பாடு இல்லாதபோது எஞ்சுவது வெறுமையே எனக் கருதினர். சைவசித்தாந்தம் கூறும் அறிவு பற்றிய கருத்தாடலில் புலன்களால் பெறப்பட்டது நம்பிக்கை மனதால் உள்ளுணர்வு மூலம் உறுதி செய்யப்பட்டது அறிவு எனவே அறிவு நம்பிக்கையை உள்ளடக்காதென்பதும் நம்பிக்கை தொடக்க நிலையில் மட்டும் காணப்படுவதென்றும் அறிவு நிலையில் நம்பிக்கை இடம் பெறுவதில்லை என்றும் கூறி நிற்கக் காணலாம். (ஞானக்குமாரன், 2017:25-27).

சைவசித்தாந்தம் குறிப்பிடும் மூவகைப் பிரமாணங்களில் காட்சி என்பது நேரடியான அறிவைக் கொடுக்கக் கூடியது. உயிரின் அறியுமாற்றலால் பெறப்படும் அறிவு நேரடி அறிவு வழிநிலை அறிவு எனப்பகுத்து நோக்குகையில் அனுமானத்தினால் மற்றும் ஆப்த அளவையால் பெறப்படுவது வழிநிலை அறிவாகும். காட்சியால் பெறப்படுவது நேரடியான அறிவாகும். அறிவானது என்றுமுள்ளதும் எல்லையற்றதும் எனக் கொள்ளப்படுகின்றது. இந்த வகையில் அறிவும் இறைவனும் ஒன்றெென அண்மித்து வருகின்ற வேளை அறிவினை அறிதல் இறைவனை அறிதலுக்கு ஒப்பானதாகின்றது. அறிவை அறிதல் என்பது சைவசித்தாந்தப்படி பிரமாணங்களின் வழி சாத்தியமாகின்றது.

ஐம்பொறிகளின் மூலம் பெறப்படுகின்ற அறிவானது புறவுலகுண்மையை வெளிக்காட்டி நிற்கின்றது. இவ்வறிவைப் பற்றி உமாபதி சிவாச்சாரியார் தனது திருவருட் பயனில்

"பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பெயர் நன்று அற" (தி, பா.5)

எனக் கூற புறவுலக அறிவைப் பெரிதும் தருகின்ற ஐம்பொறிகளில் ஒன்றான கட்புலனை ஊனக்கண் என சிவஞானபோத ஒன்பதாம் சூத்திரம் எடுத்தாளுகின்றது.

"ஊனக்கண் உணராப் பதியை

ஞானக் கண்ணிற் சிந்தை நாடி'' (சி, சூ.9)

எனக் குறிப்பிடுவதனைக் காணலாம். இவ்விடயம் ஞானமே இறைவனை உணா்த்துவதற்கு அடிப்படையாகின்றது. இதனால் இக்கருத்தினை அருணந்தி சிவாச்சாரியாா்,

"ஞானத்தால் வீடென்றோ நான்மறைகள்

புராணம் நல் ஆகமங்கள் சொல்ல'' (சி.சுப.பா.279)

என அறிவின் வழி ஞானமும் ஞானத்தின்வழி வீடுபேறும் கிட்டும் என சைவசித்தாந்தம் எடுத்தியம்புகின்றது. அஞ்ஞானம் ஞானத்தை அறியவிடாது செய்கின்றது. ஞானம் அஞ்ஞானத்தை அகற்றி இறை உண்மையை வெளிக்கொணா்கிறது எனச் சைவசித்தாந்தம் சுட்டுகின்றது. இதனை மணிவாசகா்

"அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே'' (சி, வரி.40)

கூறி நிற்பதனை நோக்கமுடியும். ஞானமாா்க்கத்தை ஏனைய பல தரிசனங்கள் முக்திக்குரிய வழியாக ஏற்பது போல சைவசித்தாந்திகளும் முடிவான மாா்க்கமாக ஞானத்தை ஏற்பா். (ஞா,2019, பக்.30-36) இதனால்தான் இறைவனை அறிவே சொரூபமானவன் என சைவசித்தாந்தம் எடுத்தியம்புகின்றது.

## உசாத்துணை நூல்கள்

இராமானுஜாச்சாரி, இரா., (1966), அறிவு ஆராய்ச்சியியல், தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ் நாடு.

கிருஷ்ணராஜா,சோ., (1995), சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை.

……….. (1998), சைவசித்தாந்த மறுபாா்வை, குமரன் பதிப்பகம், கொழும்பு.

சிவானந்தமூா்த்தி,க., (2014), சைவசித்தாந்தம் - தமிழா் மெய்யியல், அம்பாள் வெளியீட்டகம், புத்தூா்.

ஞானகுமாரன்,நா., (1994), நயந்தரும் சைவசித்தாந்தம், என்.சி.பி.எச், சென்னை.

…………. (2017), இந்திய அறிவாராய்ச்சியியல், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

அருணை வடிவேல் முதலியாா், சி., (1991), சிவஞானபோத மாபாடிய பொருள்நிலை விளக்கம், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூா்.

பாஸ்கரன்,க., (2006), சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூா்.

மகாதேவன்,ரி.எம்.பி., (1938), அத்துவித தத்துவம், தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ்நாடு.

அருணந்தி சிவாச்சாரியார் (1965), சிவஞானசித்தியார், சிவாக்கிரக உரை, திருவாவடுதுறை ஆதீனம்.

கணபதிப்பிள்ளை,சி., (2007), திருவருட்பயன், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, யாழ்ப்பாணம்.

திருவிளங்கம்,மு., (1971), சிவஞானசித்தியார் சுபக்கம், கூட்டறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனை நிலையம், தமிழ்நாடு.